# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

*************************

ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள அநுர குமார திசாநாயக்க அவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து

இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய 9ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்காக திரு அநுர குமார திசாநாயக்க அவர்களுக்கு இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் எக்ஸ் தளத்தின் (முன்னைய ருவிட்டர்) மூலமான சமூக ஊடகப் பதிவினூடாக தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

2. “இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றமைக்காக உங்களுக்கு எனது நல்வாழ்த்துகள். இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் மற்றும் சாகர் கொள்கைகளில் இலங்கை விசேட இடத்தினைக் கொண்டுள்ளது. நமது மக்களினதும் இப்பிராந்தியம் முழுவதினதும் நலன்களுக்காக நம்மிடையேயான பன்முக ஒத்துழைப்பினை மேலும் வலுவாக்குவதற்காக உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற ஆவலுடன் உள்ளேன்.’’, என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

*************************

**கொழும்பு**
**23 செப்டெம்பர் 2024**